பூந்தளிர் அமர் சித்திரக்கதை

No. 21

COMICS PDF TIMES

மகாபாரதம்-1

மகாபாரதம் -1

வேத வியாசர்



COMICS PDF TIMES

மனிதகுலத்துக்குப் பயன்படும்படி தான் கண்ட வேறொன்றை எப்படி உருவாக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, ஆக்கல் கடவுளான பிரும்மா அவரிடம் வந்தார்.
பிரும்ம தேவா! நான் ஒரு காவியம் செய்துள்ளேன். ஆனால் நான் சொல்ல அதை எழுதக் கூடிய திறமைமிக்கவரைக் காட்டவேண்டும்.
முனிவரே! காவியம் என்றா கூறினீர்? அது காவியமாகவே விளங்கட்டும்.
இதை மிஞ்சும் படியாக எழுதக் கூடிய கவி, யாரும் இருக்கப் போவதில்லை.
ஆகவே உமது காவியத்தை எழுதக் கூடியவர் கணேசர்தான்.
இதைக் கூறி பிரும்மா மறைந்தார்.
வியாசர் தியானத்திலாழ்ந்து கணேசரை அழைத்தார்.

பிரும்மதேவா! நான் ஒரு காவியம் செய்துள்ளேன். ஆனால் நான் சொல்ல அதை எழுதக் கூடிய திறமைமிக்கவரைக் காண வேண்டும்.
முனிவரே! காவியம் என்றா கூறினீர்? அது காவியமாகவே விளங்கட்டும்.
இதனை மிஞ்சும் படியாக எழுதக் கூடிய கவி, யாரும் இருக்கப் போவதில்லை.
ஆகவே உமது காவியத்தை எழுதக் கூடியவர் கணேசர்தான்.
இதைக் கூறிப் பிரும்மா மறைந்தார்.
வியாசர் தியானத்திலாழ்ந்து கணேசரை அழைத்தார்.

விக்னங்களைக் களையும் விநாயகர் உடனே தோன்றினார்.
வியாசர் விநாயகரை வணங்கி அவரை அமரச் செய்தார். பிறகு -
கணேசா, நான் இயற்றியுள்ள பாரதக் கதையை நீங்கள் எழுத வேண்டும்.
நான் எழுதும் வேகத்திற்கு உங்களால் சுலோகங்களைக் கூற முடியுமானால் எழுதுகிறேன்.
சரி, ஆனால் என் சுலோகத்தின் பொருளை அறிந்து விளக்கம் கேட்காமல் எழுத வேண்டும்.
விநாயகர் நிபந்தனையை ஏற்க, இறை வணக்கத்தோடு வியாசர் ஆரம்பித்தார்.
ஓம்! நாராயணனும், சரஸ்வதியும் எனக்கு வெற்றி ஏற்படும்படி ஆசீர்வதிப்பார்களாக.

இப்படிப்படி வியாசர் தம் காவியத்தின் சிக்கல் நிறைந்த ஆழங் காண முடியாத பகுதிகளைச் சொல்லிக் கொண்டு போனார்.
கடவுளான விநாயகரும் கூட வியாசரின் சுலோகங்களை விளங்கிக் கொள்ள சற்று தாமதிக்கும் போது, வியாசர் பல நூறு செய்யுட்களைக் கூறிமுடித்திருப்பார்.
அற்புதமாகப் பின்னப்பட்ட பாடல்களின் பொருளைப் புரிந்து கொள்ள இன்னும் யாராலும் இயலவில்லை.
காவியம் எழுதிமுடிக்கப்பட்ட-தும் வியாசர் தம் சீடர்களான சுமந்தன், ஜைமினி, பைலர், வைசம்பாயனர் மற்றும் தன் மகன் சுகர் இவர்களுக்கு நான்கு வேதங்களோடு ஐந்தா-வதான மகாபாரதத்தையும் போதித்தார்.
தன் காவிய நாயகர்கள் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்ட பிறகே இது மக்களுக்குக் கூறப்படவேண்டும் என்று விரும்பினார் வியாசர். மகாபாரதம் பரவியது இப்படித்தான்.


தன் பேரனுக்குப் பேரனை ஜனமேஜயன் 12 ஆண்டுகள் செய்யும் சர்பசாத்ரா என்னும் யாகம் செய்யப் போவதை அறிந்த வியாசர் தம் சீடர்களுடன் அங்கு வந்தார்.


முறைப்படி அவரை வரவேற்று உபசரித்த ஜனமேஜயன் வியாசரிடம் கூறினான்.
முனி சிரேஷ்டரே! பாரதப் போருக்கு நீங்கள் சாட்சியமாக இருந்திருக்கிறீர்கள். அந்த நிகழ்ச்சிகளை உங்களிடமிருந்து கேட்க விரும்புகிறேன்.


என்மூதாதையர் ஒருவரோடொருவர் ஏன் மோதிட்டார்கள். நல்லொழுக்கமுடைய அவர்கள் சாதாரண விஷயத்துக்காக ஒருவரை ஒருவர் கொன்றுகுவிப்பானேன். இதை உலகம் பாராட்டுகிறதே! முனிபுங்கவரே! அந்தப் படுகொலை ஏன்? என்மூதாதையர்களைப் பற்றிய எல்லா விஷயங்களையும் கூறுங்கள்.

வைசம்பாயனரே!
என்னிடமிருந்து நீ
கேட்டவைகளை இந்த
மன்னனுக்கு
விவரி.
சீடன் முதலில் தன் குருவை வணங்கினான்.
- பிறகு மன்னனைப் பார்த்து....
அரசனே! நான் காவி-
யத்தைப் பாடுகிறேன்.
வியாச முனிவரால்
இயற்றப்பட்ட இது லட்சம்
சுலோகங்களைக்
கொண்டது. முடிக்க
நீண்ட நாளாகும்.
இது தர்ம, அர்த்த, காம
ங்களைக் கூறுவது.
அறம், பொருள், இன்பம்,
முக்தி பற்றி வேறு
நூல்கள் கூறலாம்.
ஆனால்...
இதில் இல்லாததை
வேறு எதிலும்
காண முடியாது.
இதை அறிந்தவர்-
கள் வேதங்களை
உணர்ந்தவர்-
களாவர்கள்.

COMICS PDF TIMES

கொடியவர்கள் அதிகமாகவே பூமாதேவி,
சிருஷ்டிகர்த்தாவான பிரும்மாவிடம் போய்
முறையிட அவர் கூறினார்.
உன் வேதனை-
யைத் தீர்க்க விண்-
ணவர்களை அனுப்-
புகிறேன் நீ
கவலைப்படாதே.
பிறகு பிரும்மா, தேவ, அப்ஸர,
கந்தர்வர்களிடம் கூறினார்.
உங்கள் தகுதிக்கேற்ப
உங்கள் விருப்பப்படி
பூவுலகில் போய் அவதரி-
யுங்கள் அங்குள்ள
கொடியவர்களுடன்
போராடுங்கள்
பிறகு தேவர்கள் வைகுண்டவாசியான
நாராயணனிடம் போய்.
அவதாரம்
செய்ய
வேண்டு
கிறோம்.
அப்படியே
ஆகட்டும்.
விண்ணவர்களும்
ஒவ்வொருவராக
பூமியில் பிரம்மரிஷி
களாகவும் ராஜரிஷி
களாகவும் அவதரித்
தார்கள்



ஒருமுறை கண்வ மகரிஷியைக் காணத் தனியே ஆசிரமத்துக்கு வந்தான்
அவர் இல்லை. அவர் வளர்ப்பு மகள் சகுந்தலை மன்னரை வரவேற்றாள்.
அவள் அழகிலும் நடத்தையிலும் மயங்கிய மன்னன்–

மகாபாரதத்திலிருந்து

அதைக் கேட்ட மன்னன் கூறினான்.
பேரழகியே உன் விருப்பத்துக்கு யாருடைய அனுமதி வேண்டும் என்னை காந்தர்வ மணம் புரிந்து கொள். அது அங்கீகரிக்கப் பட்டது.
இம்முறை விவாகம் முறையானால், அதற்கு என் சம்மதமே போதுமானால், நமக்குப் பிறக்கும் மகனே உங்களுக்கு வாரிசாவான் என்று வாக்களிக்க வேண்டும்.
இந்த வாக்குக் கொடுத்தால் நான் உங்கள் மனைவியாகிறேன்.
வாக்களிக்கிறேன். என்னுடன் உன்னை அழைத்துப் போகிறேன்.
துஷ்யந்தன் சகுந்தலையின் கணவனானான். பிறகு பரிவாரங்களை அனுப்பி அவளை அழைத்துக் கொள்வதாகக் கூறி விடை பெற்றான்.
கண்வ முனிவர் இதையறிந்தால் என்ன செய்வார்?
மன்னன் சென்றதும் மகரிஷி வந்தார். தபோபலத்தினால் நடந்ததை உணர்ந்தார். மகிழ்ச்சியடைந்தவர் கூறினார்.
உனக்குப் பிறக்கும் மகன் மகத்தானவனாக விளங்குவான்
சகுந்தலை முறைப்படி ஒரு மகனைப் பெற்றாள். குழந்தை பலவானாக விளங்கியது.


ஆறு வயதில் குழந்தை புலிகளை விரட்டிப் பிடித்தான்..
..அதன் மீது சவாரி செய்தான். இவைகளைக் கண்ட முனிவர் அவன் மன்ன-
னாக வேண்டிய தருணம் வந்துவிட்டதை உணர்ந்தார்.
தன் சீடனிடம் கூறினார்.
சகுந்தலையையும்
அவள் மகனையும் தாம-
திக்காமல் அவள் கண-
வனிடம் சேர்ப்பித்து
விடு.
ஆகட்-
டும்.
ரிஷியின் சீடர்கள், சகுந்தலையையும்
அவள் மகனையும் துஷ்யந்தனிடம் அழை-
த்துச் சென்றார்கள்.



COMICS PDF TIMES

இவ்வார்த்தைகளைக் கேட்ட சகுந்தலையின் கண்கள் கோபத்தால் ஜ்வலித்தன. உதடுகள் துடித்தன.
உன் செயலை யாரும் அறியார் என்று நினைத்தாயா? எவ்வுயிரிலும் உறையும் நாராயணன் உன்னை அறிவார்.
பிறகு அவள் குரல் ஆழ்ந்த துக்கத்தோடு ஒலித்தது.
மன்னறு! ஒழுக்கம் உண்மைக்கு நிகரானது. உண்மையே கடவுள். ஆகவே அளித்த வாக்கை மீறாதீர்கள்.
பெண்ணே, நீ கூறும் வாக்குறுதி எனக்கு ஏதும் தெரியாது.
உண்மையை உங்களுக்குத் தெரியும். அதை மறுப்பது உங்களையே மறுப்பது போலாகும். கீழ்க்குடிப் பிறந்தோரே இந்த இழிசெயலைச் செய்வர்.
பெண்ணே உன்னை நான் அறியேன்.


நான் உங்கள் மனைவி குரிய-படி என்னை அழைத்துக் கொள்ள-வில்லை நீங்கள். ஆனாலும் அதற்கான தகுதி-யுடையவள் நான். மனித-னின் கண்-ணியம் மனைவி என்ற புனிதமான மண்ணில் விளைவது.
விரும்பினால் நீங்கள் என்னைப் புறக்கணியுங்-கள். நான் தந்தையிடம் போகிறேன்.
ஆனால் உங்கள் புதல்-வனை இவனைப் புறக்-கணிக்காதீர்கள். உங்-களோடு தழுவ இவனை அனுமதியுங்கள்.
உன்னிடமிருந்து நான் எந்தக் குழந்தையும் பெற-வில்லை. ஒழுக்கம் கெட்ட-வளே இங்கிருந்து போய்விடு.
நான் போகி-றேன்.
உன்னைப் போன்ற மனிதர்களிடமிருந்து விலகிப் போகி-றேன்.


ஆனால் உனக்குப் பின் என் மகனே இந்த ஆழ் சூழ் உலகத்தை ஆளப் போகிறான்
அப்போது வானிலிருந்து ஓர் அசரீரி துஷ்யந்தனிடம் கூறியது
துஷ்யந்தா! சகுந்தலை உண்மையே பேசுகிறாள் அவளிடம் உனக்குப் பிறந்த மகனை ஏற்றுக் கொள்
இதைக் கேட்ட, பூருவின் வழித்தோன்றலான துஷ்யந்தனின் முகம் மலர்ந்தது. கூறினான்.
அசரீரி கூறியதை கவனமாகக் கேட்டீர்களா? இவன் என் மகன் என்பதை நான் அறிவேன். ஆனால்...

சகுந்தலையின் வார்த்தை-
யை மட்டுமே நம்பி நான்
இவனை ஏற்பேனால் உங்கள்
வருங்கால மன்னனின் பிறப்
பிலே ஐயம் கொள்வீர்கள்.
பிறகு சகுந்தலையைப் பரிவோடு
சமாதானப்படுத்தி...
கண்ணே சகுந்தலா! நீ
என் இதயராணி. நம்
மகன் பரதன் என்று
பெயர் பெற்று எனக்குப்
பின் அரசன்
ஆவான்.
துஷ்யந்தனின் மகன் பரதன் வாயுவேகம்
கொண்ட தன் ரதத்தில் ஏறி, புவி எங்கும்
சென்று மன்னர்களையெல்லாம் வெற்றி
கொண்டு சக்கரவர்த்தியாக
விளங்கினான்.



COMICS PDF TIMES


தேவவிரதனுக்குத் தக்க வயது வந்ததும்,
சந்தனு பௌரவர்களை அஸ்தினபுரத்துக்கு
அழைத்து அவர்கள் முன்னால் இளவரசுப்
பட்டம் கட்டினார்.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு சந்தனு
யமுனை நதிக்கரையோரமுள்ள காட்டில்
நடந்து போகும் போது ஒரு நறுமணத்தை
நுகர்ந்தான். அது எங்கிருந்து வருகிறது
என்று ஆராய முற்பட்ட போது கரிய
பெரிய விழிகளையுடைய ஒரு அழகி-
யைக் கண்டான்.
பெண்ணே, நீ யார்? இங்கு என்ன செய்கிறாய்?
நான் சத்யவதி. மீனவர்களின் தலைவர் என் தந்தை. அவருக்-காக, பிரயாணி-கள் நதியைக் கடக்கப் படகு ஓட்டுகிறேன்.

சந்தனு அவளைத் தன் மனைவியாக்கிக்
கொள்ள விரும்பி, அவள் தந்தையின்
அனுமதியைக் கோரினான். மீனவன்
அதைக் கேட்டு-
அரசே, என் மகளை உங்கள் மனைவியாக்குகிறேன் உங்களை விடச் சிறந்த மணாளன் கிடைக்க மாட்டான் ஆனால்...

வாக்களிக்குமுன் உன் ஆசை என்ன என்பதை நான் அறிய வேண்டும்.
நான் உங்களைக் கேட்கப் போவது இதுதான்.
சத்யவதிக்குப் பிறக்கும் பிள்ளையே உங்களுக்குப் பின் முடி சூடிக் கொள்ள வேண்டும். வாக்களிப்பீர்களா?
அவன் விருப்பத்தை பூர்த்தி செய்ய முடியாதென அறிந்தான் சந்தனு.
மீனவனின் அழகிய மகளை நினைத்தபடியே ஹஸ்தினாபுரத்துக்குத் திரும்பினான்.

நாயகியை இழந்து கவலையுடன் தனிமையில் நாட்களைக் கழித்தான் சந்தனு.
தந்தையின் கவலையறியத் தீர்மானித்தான்
நாடு செழிப்பாக உள்ளது. எல்லாரும் உங்களுக்குப் பணிவாயிருக்கிறார்கள். பின் ஏனிந்த சோகம்?
எனக்கு நிம்மதியில்லை. நிலையில்லாத இந்த மனித வாழ்க்கையை எண்ணிக் கவலைப்படுகிறேன்.
பரதவம்சத்தின் சுடரே! நீ என் ஒரே மகன். உனக்கு ஏதாவது நேருமானால் நான் மகனில்லாதவனாவேன்.
நூறு பிள்ளைகளுக்குச் சமமானவன் நீ எனக்கு. ஆகவே மற்றொரு மகனுக்காக நான் மணக்கப் போவதில்லை.


ஆனால் போர்க்களத்தில் நீ இறந்துவிட்டால் பரத வம்சத்தின் கதி என்னாவது? இதே கவலைதான் என்னை வாட்டுகிறது.
புத்திசாலியான தேவவிரதன் தந்தை கூறியதைச் சிந்தித்த பின், தந்தையின் உற்ற மந்திரியிடம் போய் விசாரிக்க அவர் சத்யவதியின் விஷயத்தையும் அவள் தந்தையின் நிபந்தனையையும் கூறுகிறார்.
தேவவிரதன் உடனே சில பௌரவத் தலைவர்களுடன், மீனவத் தலைவனிடம் போய் தன் தந்தைக்காக அவர் மகளைக் கேட்கிறான்.
சந்தனுவின் ஒரே மகன் நீ. பரத வம்சத்தின் வாரிசு. நீ மாவீரனும் கூட. உன் தந்தை என் மகளை மணக்கத் தகுதியானவர்தான். ஆனால்.....

இதில் ஒரு சிக்கல்
உள்ளது முதல்
மனைவியின்
மகன் சம்பந்தப்
பட்டது
எதிர்காலமோ மாயப்பவனே!
உனக்குள்ளேயே ஒரு
விரோதியிருந்தால் பாது-
காப்பு ஏது? நான்
சொல்ல வேண்டியது
இதுவே.
தந்தையின் மகிழ்ச்சியிலே குறியான
தேவவிரதன்...
மீனவனே! உன் நிபந்-
தனை ஏற்கப்பட்டது. இப்
பெண்ணுக்கும் என்
தந்தைக்கும் பிறக்கும்
மகனே எங்கள்
மன்னனாவான்.
தன் மகளின் குழந்தைக்குத்தான் சிங்காதனம் என்பதை உறுதிப்படுத்திக்-
கொள்ள...
சத்தியம் தவறாதவரே!
அளித்த வாக்கை நீங்-
கள் மீறமாட்டீர்கள்
என்ற நம்பிக்கை
எனக்கு உண்டு.
ஆனாலும் உனக்குப்
பிறக்கும் குழந்தை-
கள் என்ன
செய்வார்களோ?

தேவவிரதன் உடனே கூறினான்.
மன்னர்களே கவனமாகக் கேளுங்கள். பட்டத்துக்கான உரிமையை நான் துறக்கிறேன். என் குழந்தைகள் எதுவும் உரிமை கொண்டாடாது என்பதற்காக...
..இன்று முதல் நான் பிரம்மச்சரிய விரதத்தை ஏற்கிறேன்.


தேவர்களும், அப்சரஸ்களும், ரிஷிகளும் வானிலிருந்து பூமாரி பொழிந்து தேவவிரதனைப் பாராட்டுகிறார்கள்
இவனே பீஷ்மன்!
பீஷ்மா!
பீஷ்மா!

இதைக் கண்ணுற்ற மீனவன்
பூரிப்போடு கூறினான்.
என் மகளை
மன்னனுக்கு
மனைவியாக்கி
வைக்கிறேன்.
பீஷ்மர் சத்தியவதியைப் பார்த்துக்
கூறினார்.
தாயே!
நாம் தாமத-
மின்றி ஹஸ்தி-
னாபுரம்
போவோம்.
பீஷ்மர் ரதத்திலேற்றி அவளை ஹஸ்தினாபுரத்துக்கு அழைத்-
துப் போனார்.
தன் மகனின் மகத்தான செயலைக் கண்டு வியந்த
சந்தனு அவனுக்கு ஒரு வரமளித்தார்.
நீ விரும்பும் வரை
மரணம் உன்னை
அணுகாது! குற்றமற்ற-
வனே! நீ அழைக்-
கும் போது மட்டுமே
மரணம்
உன்னை
அணுகும்.

சத்யவதி உண்மையில் வஸு உபரிசரனின் மகள். வேதவியாசரின் தாய் என்று அறிவாளிகளும் சான்றோரும் கூறக் கேட்டிருக்கிறேன். இதன் உண்மையை விளக்க வேண்டுகிறேன்.
நீ கேள்விப்பட்டது உண்மையே. நடந்தது இதுதான். சேதி தேசத்து மன்னனை வஸு இந்திரனால் அளிக்கப்பட்ட தேவ லோகத் தேரிலே ஆகாயத்தில் பறந்ததினால் உபரிசரன் என்றும் அழைக்கப்படுவான்.
ஒரு சமயம் உபரிசரனின் சக்தியை, யமுனை நதியிலிருந்த ஒரு மீன் விழுங்கியது.
சில மாதங்களுக்குப் பிறகு அது மீனவர்களால் பிடிபட்டது. அதன் வயிற்றில் அவர்கள் ஒரு ஆண் ஒரு பெண் குழந்தைகளைக் கண்டு வியப்படைந்தனர்.


உபரிசரனிடம் கொண்டு போய்...
மன்னவா! இவ்விரு மனிதக் குழந்தைகளையும் ஒரு பெரிய மீனின் வயிற்றில் கண்டோம்
உபரிசரன் ஆண் குழந்தையைத் தான் ஏற்றுக் கொண்டான். அவனே பின்னால் மத்ஸ்ய நாட்டு மன்னன் ஆனான்.
மீன் வாடை வீசிய பெண் குழந்தையை மீனவனிடமே கொடுத்து—
இதை உன் குழந்தையாக வளர்த்து வா.
அவள் வளர்ந்து பெரியவளானாள். அவளே சத்யவதி. தன் வளர்ப்புத் தந்தைக்காக யமுனையில் படகோட்டி வந்தாள்.

COMICS OF TIMES

உடனே முனிவர் அவள் விருப்பத்தை நிறைவேற்றினார். சத்யவதி - கந்தவதி நறுமணம் கமழும் நங்கையானாள்.
பராசர முனிவரின் அருளினால், கந்தவதிக்கு அந்தத் தீவிலே ஒரு அபூர்வக் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்-ததும் ஆச்சரியப்படும் வகையில் வளர்ந்து வாலி-பனாகியது
அந்த அபூர்வப் பிறவி துறவு மேற்-கொண்டு கூறினார்.
அன்னையே நீங்கள் விரும்பும் போது நினையு-ங்கள். நான் தோன்றுவேன்.
விடை பெற்றான்.


பராசரர் மூலம்
சத்யவதிக்குப் பிறந்த
இவரே என் குரு
வியாசர்

தீவிலே பிறந்ததால் த்வை-
பாயனர் என்றழைக்கப்
பட்டார் - கார் வண்ண
மேனியினால்
கிருஷ்ணனானார்.

அறிவாளியான கிருஷ்ண
த்வைபாயனர் வேதங்-
களை ஒழுங்கு படுத்திய-
தினால் வேதவ்யாசர்
எனப்பட்டார்.


யாகசாலையில் அவர் தேவை
ப்படுவதாக, மன்னன்
ஜனமேஜயனிடம் முனிவர்
கூற....
எல்லோரும் ஹோமகுண்டத்தை நோக்கி
நடந்தார்கள்


வேள்வித்தீயின் முன்னால் அமர்ந்தார்கள்.
ஜனமேஜயன் செய்யும் சர்ப்பசாத்ர
யாகத்தின் இடைவேளையில் வைசம்-
பாயனரால் கூறப்பட்ட வியாச பக
வானின் இறவா இதிகாசமான
மகாபாரதத்தின் முதல் கதை
முடிவுற்றது.